## <u>என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் / … my words abide in you…..</u>

. . .. அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! …his paths beyond tracing out! (Romans 11:33)
How impossible it is for us to understand his decisions and his ways! (NLT)
And how untraceable (mysterious, undiscoverable) are His ways (His methods, His paths)! (AMP)

ஜீவனுள்ள வசனத்தை வாசித்து தியானித்து சிந்தித்து அதை நமது இருதயத்திலே நிலைத்திருக்கச் செய்வோம். அவர் நமது உள்ளான இருதயத்தை அவருடைய ஆவியினாலே நிரப்பும்பொழுது அவரது வார்த்தைகளை நமது சிறிய அறிவுக்கு விளங்கவைப்பார். ஆமென்.

யோவான் 15வது அதிகாரத்தை தயவுசெய்து எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

## <u>let us pray. ..</u>

<u>யோவான் / John 15:7</u> *இயேசுகிறிஸ்து சொல்கிறார்:*

**நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.**

If you remain in me and my words remain in you, ask whatever you wish, and it will be given you. (NIV)
my words <u>abide</u> in you (KJV)
My words <u>remain in you and continue to live in your hearts</u>, (AMP)

இப்போ நாம் வாசித்த வேதவார்த்தையில் நாம் அவரிலும், அவருடைய வார்த்தை நம்மிலும் நிலைத்திருந்தால். . .நாம் கேட்டுக்கொள்வது எதுவோ அது கொடுக்கப்படும். ஆமென்.

இதிலே உள்ள <u>நிலைத்திருந்தால்</u> என்ற வார்த்தையை நாம் சற்று ஆழ்ந்து சிந்தித்தால். . ..

*<u>From website ref</u>*: **<u>abide:</u>** not to depart, to continue to be present, <u>to be held, kept, continually</u>, to continue to be, not to perish, to last, endure, to remain as one, not to become another or different

*<u>From Lifco Tamil Dictionary</u>*: **<u>abide:</u>** **தொடர்ந்து இரு, உறுதியாக நில், உண்மையாக நடந்துகொள், காத்திரு, சகித்துக் கொள்.**

*<u>From Web Dictionary</u>*: ***<u>abide</u>***: to endure, sustain or withstand without yoelding or submitting, to accept without opposition or question, to remain steadfast or faithful, to continue to be sure or firm.

*இந்த உலகத்தின் வாழ்க்கையில். . ..*

*ஒருவர் இயேசுவோடு இருக்கிறேன் என்றாலும் அவரோடு இயேசுவின் வார்த்தை இல்லாத சூழ்நிலை இருக்கலாம். வேறொருவர் இயேசுவின் வார்த்தை என்னோடு இருக்கிறது என்றாலும் அவரோடு இயேசு இல்லாத சூழ்நிலையும் இருக்கலாம்.*

*இந்த இரண்டு பேர்களும் கர்த்தரின் இரட்சிப்பின் வழியிலே செல்ல இயலாது என நான் நினைக்கின்றேன்.*

*இதுபற்றி நன்றாக சிந்தித்துப் பாருங்கள். . . .. . . .*

*அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாக இருக்கிறார். அவரை முழுமையாக உணர்ந்து அவருடைய வழியிலே உள்ளவர்களிடம் நிச்சயம் அவரது ஜீவனும் (அவரும்) சத்தியமும் இருக்கவேண்டும். ஆமென்.*

கர்த்தரின் இரட்சிப்போடு வாழும் நமக்கு,
ஜீவனுள்ள வார்த்தை நமக்குள்ளே இருந்து பேசும், உணர்த்தும். . . என்று அறிந்திருக்கிறோம்.

எல்லா நேரத்திலும் இந்த ஜீவனுள்ள வசனம் நம்மோடு பேசி, நம்மை ஆட்கொண்டு, இந்த உலக சூழ்நிலையை மேற்கொள்ள வல்லமையாக நம்மிலே செயல்படும். ஆமென்.

நாம் அவரிலேயும் அவருடைய வார்த்தை நம்மிலேயும் நிலைத்திருக்கும்போது, அதாவது வெளியிலே மட்டுமல்ல, நமது உள்ளான இருதயத்திலே நிறைந்து நிலைத்திருக்கும்போது… நாம் கேட்பதெல்லாம் அவருடைய நாமத்தின் மகிமைக்காகத்தான் இருக்கும். அதை அவர் கொடுக்காமல் இருப்பாரா? நிச்சயம் கொடுப்பார். இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவர் நாம் கேட்பதை கொடுப்பது மிக சுலபம்.

***அதை விட முக்கியமான மற்றொன்றையும் அடுத்த வசனத்திலே வாசிக்கலாம்.***

<u>யோவான் / John 15:8</u> *இயேசுகிறிஸ்து சொல்கிறார்:*

நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

This is to my Father's glory, that you bear much fruit, showing yourselves to be my disciples. (NIV)
Herein is my Father glorified, that ye bear much fruit; so shall ye be my disciples. (KJV)
When you bear (produce) much fruit, My Father is honored and glorified, and you show and prove yourselves to be true followers of Mine. (AMP)

**அவர் நமக்கு கொடுப்பதைவிட நாம் அவருக்காகவும் அவருடைய நாமத்தின் மகிமைக்காகவும் என்ன கொடுக்கிறோம் என்பது மிக முக்கியம். அதுவே நம்மை அவருடைய உண்மையான சீஷராக்கும். ஆமென்.**

அதே அதிகாரத்திலே யோவான் / John 15:12 *இயேசுகிறிஸ்து சொல்கிறார்:*
நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.
My command is this: Love each other as I have loved you. (NIV)

**இந்த வார்த்தை நம்மிலே நிலைத்திருந்தால், நம்முடைய வாழ்க்கையில் நாம் மற்றவர்களை அனுகும் முறை எப்படி இருக்கும்? சிந்தித்துப் பாருங்கள்.**

*(Swiss conference main aim….)*

அதற்கு முன் வசனம். . .யோவான் / John 15:11 *இயேசுகிறிஸ்து சொல்கிறார்:*
என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், **இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.**
**I have told you this** so that my joy may be in you and that your joy may be complete. (NIV)
**These things have I spoken** unto you, that my joy might remain in you, and that your joy might be full. (KJV)

**இந்த வார்த்தை நம்மிலே நிலைத்திருந்தால், நமக்கு எவைகளை சொல்லியிருக்கிறாரோ. . .அதையெல்லாம் நாம் செய்ய வேண்டுமே என்ற வாஞ்சை நமக்கு தானாகவே உற்சாகத்தோடு எழும்பும். ஆமென்.. . . . சிந்தித்துப் பாருங்கள்.**

என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். என்றார். (யோவான் / John 16:33)

**இந்த வார்த்தை நம்மிலே நிலைத்திருந்தால், நமக்கு எவைகளை சொல்லியிருக்கிறாரோ. . .அதையெல்லாம் நாம் செய்ய வேண்டுமே என்ற வாஞ்சை நமக்கு தானாகவே உற்சாகத்தோடு எழும்பும். ஆமென்.. . . . சிந்தித்துப் பாருங்கள்.**

அரிச்சந்திரன் கதை கேள்விப்பட்டிருக்கிறீர்களா?
தான் கொடுத்த வாக்கை காத்துக் கொள்ளவும், உண்மையே பேசவேண்டும் என்ற கட்டளையை எந்த சூழ்நிலையிலும் காத்து வாழ்ந்த ஒரு அரசன். *(சுறுக்கமாக. .)*
இப்படி நிலைத்திருக்க அவருடைய இந்த நடக்கையை சோதிக்க ஒரு முனிவர் முயற்சிக்கிறார்.. அதனாலே. .. .தனது ராஜ்யம், மனைவி, குழந்தையை இழந்து இடுகாட்டிலே (cemetry) கூலி வேலைக்கு வேலை செய்தார். தனது குழந்தை இறந்து உடலை அடக்கம்பண்ண வந்த மனைவியிடம் குழந்தை அடக்கம்பண்ண தேவையான பணத்தைக் கேட்டு அந்த வேலையிலும் உண்மையாக இருநதார். பணம் இல்லாத மனைவியின் புடவையிலே முன்பே ஒரு பகுதியை கிழித்து இறந்த குழந்தையை மூடியிருந்த அவள், மறுபகுதியை கணவன் கேட்ட தொகைக்கு கொடுக்க ஆடையை கலைந்தபோது, வானத்திலிருந்து தேவர்கள் வந்து அவர்கள் உண்மையில் நிலைத்திருந்ததை பாராட்டி அவர்களை மீட்டனர்.. . . . இந்தியாவிலே இப்படியாக ஒரு கதை.. இந்த கதை காந்தியை மிகவும் கவர்ந்த ஒன்று.
இதை ஒவ்வொரு வருடமும் எங்கள் ஊரிலே சில கோவில்களிலே நாடகமாக நடித்து இதை பிரபல்யம் செய்வார்கள். ஒவ்வொரு வருடமும் பார்த்து செல்பவர்களில் ஒருவரும் அப்படியாக வாழ்க்கையிலே நடப்பதை, நான் பார்க்கவில்லை. . . இதுதான் உலக இயல்பு. சரி அதை விடுவோம்.

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யயப்படும்.
ஆபிரகாமுக்கு தேவன் ஒரு வார்த்தை சொன்னார். . . . .உனது மகனை. . .தகனபலியாகப்பலியிடு. .. என்று சொன்னார். அந்த வார்த்தைக்கு ஆபிரகாம் கீழ்ப்படிந்தார். அந்த வார்த்தை அவர் உள்ளத்திலும் நிலைத்திருந்து அந்த மகனை பலியிடும்வரை எந்த மாற்றமும் இல்லாமல் நிறைவேற்ற முடிந்தது. அப்படி அவர் நிறைவேற்றிய வேலையிலே. .. தேவன் ஆபிரகாம் தேவனுக்குப் பயப்படுகிறவர் என்பதையும் தேவன் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தவர் என்பதையும் சொல்லி அநேகவிதமான ஆசீர்வாதங்களை அவருக்கும் அவரது சந்ததிக்குள் உள்ள சலக ஜாதிகளுக்கும் கொடுக்கிறார்.
ஆபிரகாம் தேவனிலும், தேவனுடைய வாாத்தை ஆபிரகாமிலும் நிலைத்திருந்து, தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தக்கூடிய கனிகொடுக்கும் உண்மையான சீஷராக இருந்தார். அவருக்கு தேவனால் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம் பல. ஆமென்.
இந்த இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை அப்பொழுதே ஆபிரகாம் விசுவாசத்திலே பெற்றிருப்பார் என நினைக்கின்றேன்.
உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார்.
Your father Abraham rejoiced to see my day: and he saw it, and was glad. (John 8:56)

*மீண்டுமாக . . . .* யோவான் / John 15:7-8

**நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யபப்படும்.**

நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.
If you remain in me and my words remain in you, ask whatever you wish, and it will be given you.
This is to my Father's glory, that you bear much fruit, showing yourselves to be my disciples. (NIV)

If ye abide in me, and my words abide in you, ye shall ask what ye will, and it shall be done unto you. Herein is my Father glorified, that ye bear much fruit; so shall ye be my disciples. (KJV)

If you live in Me [abide vitally united to Me] and My words remain in you and continue to live in your hearts, ask whatever you will, and it shall be done for you.
When you bear (produce) much fruit, My Father is honored and glorified, and you show and prove yourselves to be true followers of Mine. (AMP)

யோவான் / John 8:31-32

இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள;
சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.

Then said Jesus to those Jews which believed on him, If ye continue in my word, then are ye my disciples indeed; And ye shall know the truth, and the truth shall make you free. (KJV)

Then Jesus said to those Jews who believed Him, “If you abide in My word, you are My disciples indeed. And you shall know the truth, and the truth shall make you free.” (NKJV)

**இந்த வசனத்தைக் கவனியுங்கள். . ..**

**விசுவாசித்த யுதர்களை நோக்கி சொல்கிறார். . . .இயேசுகிறிஸ்துவுடைய உபதேசத்திலே நிலைத்திருந்தால். . மெய்யாகவே சீஷர்கள் என்றும். . . .அப்பொழுது அவர்கள் சத்தியத்தையும் அறிவார்கள். சத்தியம் அவர்களை விடுதலையாக்கும்.**

> **இந்த உலகத்தில், சத்தியத்தை அறிந்தவர்கள் . . .எவ்வளவோ பேர்கள் இருக்கலாம்.**
>
> *(By self study, college study, even at church visit, bible study……by so many other ways)*
>
> **அவர்கள் அனைவரும் விடுதலை பெற்றவர்கள் அல்ல.**
>
> > **இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய உபதேசத்திலே நிலைத்திருந்து, அவருடைய சத்தியத்தை அறிந்தவர்கள் . . . .விடுதலை பெற்றவர்கள்.**

*(Please note: John 15:7, 15:11 and John 8:31 use the same greek word for the word abide.) (நிலைத்திருக்க)*

**இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நாம் அனைவரும்,**

**அவருடைய உபதேசத்திலே நிலைத்திருந்தால் அவருக்கு மெய்யான சீஷர்களாக இருப்போம். அப்பொழுது சத்தியத்தையும் அறிவோம். சத்தியம் நம்மை விடுதலையாக்கும். ஆமென்.**

ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.
So if the Son sets you free, you will be free indeed. (NIV)

**அப்படிப்பட்ட மெய்யான விடுதலையை நாம் ஒவ்வொருவரும் பெற்று, அதை மற்றவர்களுக்கு காட்டக்கூடிய வண்ணமாக கர்த்தர் நம் அனைவரையும் ஆட்கொண்டு வழிநடத்துவாராக.**

*நாம் அனைவரும் தயவுசெய்து எழுந்து நின்று யெகோவாயீராக இருப்பவரை நோக்கிப் பார்ப்போம்.*

## Let us Pray